இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (30.09.2025) இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின்கீழ் (Master Plan) திருவேற்காடு, வடலூர் வள்ளலார் தெய்வநிலையம் மற்றும் திருச்செந்தூர் ஆகிய திருக்கோயில்களில் நடைபெற்று வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்தும், திருச்செந்தூர் கந்த சஷ்டி பெருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்தும் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

எண்ணூர் 'பெல்' நிறுவன கட்டுமானப் பணியில் விபத்து!

9 பேர் மறைவு! அரசின் சார்பில் ரூ. 10 லட்சம் நிவாரணம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.1-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

எண்ணூரில் பெல் நிறுவனம் மேற்கொண்டு வரும் மின் உற்பத்தி நிலையக் கட்டுமானப் பணியில் ஏற்பட்ட விபத்தில், அசாம் மாநிலத்தைச் சேர்ந்த ஒன்பது பணியாளர்கள் இறந்த செய்தி கேட்டு மிகவும் வருத்தமடைந்தேன். உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், மின்வாரிய தலைவர் ஜெ. ராதாகிருஷ்ணன் ஆகியோரை உடனே நேரடியாகச் சென்று நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்த பணியாளர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ.10 இலட்சம் நிவாரணமாக வழங்கிடவும், அவர்களது உடலை அவர்களது சொந்த மாநிலத்திற்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆணையிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்படவுள்ள

"பாடியநல்லூர் பேருந்து நிலையம்"அமைப்பதற்கான பணிகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.1-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (30.9.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு மாதவரம் சட்டமன்ற தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் "பாடியநல்லூர் பேருந்து நிலையம்" அமைப்பதற்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு, பணிகளை தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி சிஎம்டிஏ சார்பில் ரூபாய் 200 கோடி மதிப்பீட்டில் 11 மாநகர போக்குவரத்து கழக பேருந்து நிலையங்கலான திரு.வி.க. நகர், பெரியார் நகர், தண்டையார் பேட்டை, முல்லை நகர், கண்ணதாசன் நகர், அம்பத்தூர், திருவான்மியூர், ஆவடி, அய்யப்பன்தாங்கல், வள்ளலார் நகர் மற்றும் பாடியநல்லூர் ஆகிய பேருந்து நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு, அதில் அண்மையில் திரு.வி.க. நகர் மற்றும் பெரியார் நகர் ஆகிய 2 பேருந்து நிலையங்கள் முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 25.08.2025 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அற்பணிக்கப்பட்டது. மேலும், தண்டையார் பேட்டை, முல்லை நகர், கண்ணதாசன் நகர் மற்றும் அம்பத்தூர் ஆகிய பேருந்து நிலையங்கள் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்காக அற்பணிக்கப்படவுள்ளது. திருவான்மியூர், ஆவடி, அய்யப்பன்தாங்கல் மற்றும் வள்ளலார் நகர் ஆகிய பேருந்து நிலையங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக நேற்று (30.9.2025) மாதவரம் சட்டமன்ற தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் "பாடியநல்லூர் பேருந்து நிலையம்" அமைப்பதற்கான பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், திரு வள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர் ராஜன்பாபு, எம்டிசி பொது மேலாளர் (இயக்கம்) எநெடுஞ்செழியன், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

சிறுவர் புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தினையொட்டி,

மாநகராட்சி ரிப்பன் கட்டடம் பொன்னிறத்தில் ஒளிரூட்டப்பட்டது!

சென்னை, அக்.1-

சிறுவர் புற்றுநோய் விழிப்புணர்வு செப்டம்பர் மாதத்தை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தின் ரிப்பன் கட்டடமானது நேற்று (30.09.2025) மாலை பொன்னிறத்தில் ஒளிருட்டப்பட்டுள்ளது. இந்த பொன்னொளியானது நம்பிக்கை, மனவலிமை மற்றும் ஒவ்வொரு குழந்தையின் உயிரின் விலை மதிப்பற்ற தன்மையினை குறிக்கும் சின்னமாகும்.

இந்த விழிப்புணர்வு முயற்சியினை பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து முழுமையான குழந்தைப் பருவ புற்றுநோய் பராமரிப்பு மற்றும் ஆதரவிற்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்தியாவின் மிகப்பெரிய குழந்தைப் பருவ புற்றுநோய் தன்னார்வ தொண்டு நிறுவனமான CanKids KidsCan வழிநடத்துகிறது.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 80,000 க்கும் மேற்பட்ட குழந்தைகள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர், ஆனால் பலர் சரியான நேரத்தில் நோயறிதல் மற்றும் முழுமையான சிகிச்சையில் தடைகளை எதிர்கொள்கின்றனர், ஏனெனில் புற்று நோயால் பாதிக்கப்பட்ட 53% குழந்தைகள் மட்டுமே குழந்தைப் பருவ புற்றுநோய் சிகிச்சை மையத்தில் சிகிச்சையை அணுக முடிகிறது. இதன் விளைவாக, இந்தியாவில் உயிர்வாழும் விகிதம் 25-35% ஆக உள்ளது, வளர்ந்த நாடுகளில் 80% க்கும் அதிகமாக உள்ளது.

தமிழ்நாடு தேசிய சுகாதார இயக்கம் மற்றும் கல்வித் துறையுடனான அதன் கூட்டாண்மை மூலம் CanKids இந்த இடைவெளிகளைக் குறைப்பதற்கும், மருத்துவம், ஊட்டச்சத்து, கல்வி மற்றும் உளவியல் ரீதியான ஆதரவை வழங்குவதற்கும் Access2Care-ஐ அதிகரிப்பதற்கும் பாடுபடுகிறது. இந்த NGO 22 மாநிலங்கள் மற்றும் நாடு முழுவதும் 60 நகரங்களில் 141 புற்றுநோய் மையங்களில் செயல்படுகிறது.

இந்த முயற்சியைப் பற்றி CanKids, Kidscan இன் தெற்கு பிராந்தியத் தலைவர் திருமதி லதா மணி பேசுகையில், "பெருநகர சென்னை மாநகராட்சி கட்டடத்தின் பொன்னிற ஒளி வெறும் அடையாளமாக மட்டுமல்லாமல், புற்றுநோயை எதிர்த்துப் போராடும் ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாகவும், ஒரு பொன்னான எதிர்காலமாகவும் உள்ளது. ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டு முறையாக சிகிச்சையளிக்கப்பட்டால் குழந்தைப் பருவப் புற்றுநோய் குணப்படுத்தக் கூடியது என்ற முக்கிய செய்தியை இது பரப்புகிறது.

எங்கள் கூட்டாளர்களுடன் சேர்ந்து புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் எந்தக் குழந்தையும் பின்தங்கியிருக்கக்கூடாது என்பதை உறுதி செய்வதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். இந்த முயற்சி CanKids இன் #BanjayengeGold பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகும், இது விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சமூகங்களை ஈடுபடுத்துதல் மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை ஆதரிப்பதற்கான கூட்டு நடவடிக்கையை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:

திருமதி லதா மணி
தெற்கு பிராந்தியத் தலைவர்
CanKids KidsCan
தொலைபேசி: 98411 05537
மின்னஞ்சல்: lathamani@cankidsindia.org
இணையதளம் : www.candkidsindia.org

தமிழ்நாடு அரசின் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாம், சென்னை, அண்ணாநகர் மண்டலம் 8, 106 வது வட்டம் பகுதியில் நேற்று (30.09.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், அண்ணாநகர் தெற்கு பகுதி செயலாளர் ந.இராமலிங்கம், திமுக மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், வட்டக் கழக செயலாளர்கள் ந.அதியமான் எம்.சி., இரா. பொன்னுரங்கம், இரா. நவீந்திர குமார், தெ. கருணாநிதி, வி.எம் சிவா,வெ. சண்முகம்,மாநகராட்சி மண்டல அதிகாரி சுந்தர்ராஜன், ரமேஷ் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தனர். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இம்முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு, தங்கள் கோரிக்கை மனுக்களை அளித்தனர்.

திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருக்கோவிலூர் நகரம், 9வது வார்டு தியாகி வடிவேல் நகரில் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கட்டிடத்தை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ பொதுமக்களின் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட துணை ஆட்சியர் ஆனந்தகுமார் சிங், டி.என்.முருகன், மு.தங்கம், டி.செல்வராஜ், ஆர். கோபிகிருஷ்ணன், அ.சா.ஏ.பிரபு, உமாமகேஸ்வரி குணா மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

தேசிய முதியோர் நல மருத்துவ மையத்தில் 1.5 ஆண்டுகளில்

3.80 இலட்சம் முதியோர்கள் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர்!

சர்வதேச முதியோர் தின விழாவில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, அக்.1-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (30.09.2025) சென்னை, கிண்டியில் உள்ள தேசிய முதியோர் நல மருத்துவமனையில், "சர்வதேச முதியோர் தினம் 2025" நிகழ்ச்சியில், "நலமான பெண்கள் வளமான வாழ்வு" மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து, ரூ.60 இலட்சம் செலவில் மருத்துவ உபகரணங்களை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:-

சர்வதேச முதியோர் தினம் 2025

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 01ந்தேதி உலக நாடுகளால் சர்வதேச முதியோர் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் கடந்த ஆண்டு சர்வதேச முதியோர் தினம் இம்மருத்துவமனையில் கொண்டாடப்பட்டது. இந்தியாவிலேயே தேசிய முதியோர் மருத்துவ மையம் 2 அமைக்கப்படும் என்று ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த 25.02.2024 அன்று கிண்டியில் 200 படுக்கை வசதிகள் கொண்ட இம்மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது. இம்மருத்துவமனை தொடங்கப்பட்ட 1.5 ஆண்டுகளில் தினந்தோறுமான புறநோயாளிகளின் எண்ணிக்கை 1000 பேருக்கும் மேல் பயன்பெற்று வருகிறார்கள். இதுவரை புறநோயாளிகளின் 3,80,594 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். உள்நோயாளிகளாக 10,612 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். உலக முதியோர் தினத்தில் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இருக்கின்ற மருத்துவர்களை உலக முதியோர் தின விழாவில் குறிப்பாக சென்னையில் நடைபெறுகின்ற இவ்விழாவில் பங்கேற்க அழைப்பு விடுத்து அவர்களை இம்மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். இந்தியாவில் உள்ள மக்கள் தொகையில் 10.5% மூத்த குடிமக்கள் இருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்திய சராசரியை விட கூடுதலாக தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் 13.7% மூத்த குடிமக்கள் வசித்து வருகிறார்கள். அதற்கான காரணம் தமிழ்நாட்டில் முதியோருக்கான மருத்துவக் கட்டமைப்பு மிகச் சிறப்பாக இருப்பதும், மூத்த குடிமக்கள் அதிகமானோர் வசித்து வருவதாலும் 1978 ஆம் ஆண்டு நமது சென்னையில் இங்கு வந்திருந்த மருத்துவர் நடராசன் என்பவர் வாயிலாக மருத்துவத்துறை இங்கு தான் உருவானது. அதற்கு பிறகு முதியோர்களின் நலனை பாதுகாக்கின்ற வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது 2007 ஆம் தொடங்கி தமிழ்நாட்டில் முதியோர் மருத்துவ மையம் அமைக்க வேண்டும் என்கின்ற வகையில் அரசின் சார்பில் 8.5 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு மருத்துவ மையம் உருவாகி கடந்த ஆண்டு பிப்ரவரி திங்கள் 25 ஆம் தேதி இம்மருத்துவமனை தொடங்கப்பட்டது.

வசதிகள்

இம்மருத்துவமனையில் முதியோர்களுக்கான சிகிச்சைக்கு 24 மணிநேரமும் படுக்கை வசதிகளுடன் உருவாக்கி முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, 20 கட்டண அறைகள் பயன்பாட்டில் இருக்கின்றது. இந்த கட்டண அறைகளில் மிக குறைந்த அளவில் மட்டுமே கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மருத்துவம் மற்றும் உணவு போன்ற வசதிகளுடன் குளிர்சாதன வசதிகளுடன் கூடிய அறைக்கு ரூ.900/ மட்டுமே வசூலிக்கப்படுகிறது. இந்த மருத்துவமனையில் நூலகம், கேரம்போர்டு, செஸ் பலகைகள், பல்லாங்குழி போன்ற பல்வேறு விளையாட்டு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு மாலையில் இங்கு வருகின்ற மருத்துவ பயனாளர்களின் ஓய்வு நேரத்தில் மகிழ்ச்சியுடன் நேரம் கழிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் இந்த மருத்துவமனைக்கு பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஏராளமான பேர் சிகிச்சைக்கு வருகை புரிகின்றனர். கடந்த ஏப்ரல் திங்கள் 25 ஆம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, ரூ.8 கோடி செலவில் புதிய MRI ஸ்கேன் கருவி வழங்கப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல் கலைஞரின் கண்ணொளி திட்டத்தின் மூலம் 492 முதியோர்களுக்கு இலவசமாக கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் முதியோர்களுக்கு வழக்கமாக வருகின்ற நோய் பாதிப்பு நிமோனியா. இந்த நோய்க்கு தடுப்பூசி தமிழ்நாடு அரசு சார்பில் 635 பேருக்கு போடப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசி வெளியில் சென்று போடப்பட்டால் ரூ3,000/ வரை செலவாகும். அந்த தடுப்பூசி இம்மருத்துவமனையில் இலவசமாக போடப்பட்டு வருகிறது. இன்று இந்த நிகழ்ச்சியின் மூலம் எண்டோஸ்கோப்பி, பல் மருத்துவ உபகரணங்கள், கண் மருத்துவ உபகரணங்கள் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதன்மூலம் மிக விரைவில் கண் புரை அறுவை சிகிச்சை செய்யப்படவிருக்கிறது. எலும்பின் திடத்தன்மை அறிய Dexa Scan வசதி அமைய உள்ளது.

இந்த மருத்துவமனையில் உள்ள இன்னொரு கூடுதல் சிறப்பு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னை மருத்துவக் கல்லூரியில் 1998ஆம் ஆண்டு முதுநிலை பட்ட மேற்படிப்பு தொடங்கப்பட்டது. வயது மூத்த வர்களுக்கு முதுநிலை பட்ட மேற்படிப்பு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. இதன் மூலம் 72 முதியோர் மருத்துவர்களை பெற்றிருக்கிறது. இந்த 1.5 ஆண்டுகளில் 28 முதியோர் மருத்துவர்களை உருவாக்கி கொண்டிருக்கும் நிலையில் பிறகு 100 முதியோர் நல மருத்துவர்கள் உருவாக்கப்பட்டு, தமிழ்நாட்டில் முதியோர்களுக்கு மருத்துவ சேவைகள் ஆற்றவிருக்கிறார்கள். இந்தியாவில் மிகப்பெரிய அளவில் வேறு எந்த மாநிலத்திலும் முதியோருக்கான நல மேற்படிப்பு என்பது வேறு எங்கேயும் இல்லை. முதுநிலை மேற்படிப்பு என்பது தமிழ்நாட்டில் மட்டுமே இருந்துக் கொண்டிருக்கிறது. இப்படி பல்வேறு வசதிகள் கொண்ட இம்மருத்துவமனையில் தேசிய முதியோர் தினம் 2025 அனுசரிக்கப்பட்டது. வெளிமாநிலங்களிலிருந்து வருகை புரிந்த மருத்துவர்கள் கவுரவிக்கப்பட்டு அவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது.

கரூர் கூட்ட நெரிசல் விபத்து மருத்துவ சிகிச்சைகள் தொடர்பான கேள்விக்கு

கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் 40 உயிர்கள் இறந்த நிலையிலேயே கொண்டு வரப்பட்டது. நேற்று 29.09.2025 அதிகாலை 02 மணிக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 60 வயது மதிக்கத்தக்க சகோதரி மரணமடைந்து விட்டார். அவரைப் பொறுத்தவரை கூட்ட நெரிசலில் சிக்கி பாதிக்கப்பட்டு வந்தவர். அவருக்கு 500 என்கின்ற வகையில் சர்க்கரை நோய் இருந்தது. அதுமட்டுமல்லாமல் நிறைய உடல் பாதிப்புகள் இருந்தது. வந்ததிலிருந்தே வெண்டிலேட்டர் சிகிச்சையில் இருந்தார்கள். அதிகாலையில் இறந்து விட்டார்கள். இவர் ஒருவர் மட்டுமே மருத்துவமனையில் உயிரிழந்தவர். மீதமிருந்த 40 பேர் இறந்த நிலையிலேயே சடலங்களாக மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டார்கள். இன்று காலை வரை 53 பேர் அட்மிஷனலில் இருந்தார்கள். காலை 10 மணிக்கு மேல் நிறையே பேர் டிஸ்சார்ஸ் ஆகி சென்று விட்டார்கள். இன்று மாலைக்குள் பெரும்பாலானோர் குணமடைந்து வீடு திரும்புவார்கள். மேலும் 2 பேர் எலும்பு உடைந்து சிகிச்சை வந்திருந்தார்கள், அவர்களின் பாதிப்புகளை உணர்ந்து முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தனி சிறப்பு வாகனம் மூலம் மருத்துவர் குழுவுடன் மதுரை மருத்துவமனைக்கு மாற்றியிருக்கிறோம். அவர்களுக்கு மிகச் சிறப்பான வகையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பத்மஸ்ரீ மரு.வி.எஸ்.நடராசன், ஒன்றிய அரசு இணைச் செயலாளர் (ABPMJAY) லலித்வத்வா, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சாந்தாராமன், தேசிய முதியோர் நல மருத்துவ மையம் இயக்குநர் மரு.தீபா, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் கூடுதல் இயக்குநர் மரு.லோகநாயகி மற்றும் மருத்துவ பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.

உலக சுற்றுலா தினத்தையொட்டி சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் ஒரு முறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்த்திடும் வகையில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மஞ்சப்பைகளின் பயன்பாடு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினார். உடன் டி.எம்.செல்வகணபதி எம்.பி., சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, மாவட்ட சுற்றுலா அலுவலர் வினோத் குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.